## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 44. ஸ்ரீமான். லத்தீப்ஷா

---

இறைவனை உணர மதம் ஒரு கதவு.அது ஆன்மீகம் என்ற வீட்டுக்குள் நம்மை அழைத்துச் செல்ல வேண்டும். அனைத்து மதங்களும் கூறும் ஆன்மீக உண்மை ஒன்றே! ப்ரஹ்ம தத்வம் ஒன்றே என்று உணர்ந்தோம் எவரும் மேன்மைமிகு அன்பரே.உலகில் எவருக்கும் முயன்றால் இறை தரிசனம் கிடைக்கும்.மத வெறியால் வேற்றுமையும் வன்முறையும் அமைதியின்மையும் ஏற்படும்.

தமிழகத்தில் வாழ்ந்த சாக்கிய நாயனார் போல் இவர் வேற்று மதத்தில் இருப்பினும் இவர் சனாதன தர்மத்தின் ஆன்மீகக் கருத்துக்களை உணர்ந்து பயிற்சிகள் செய்ததன் மூலம் தெய்வீக தரிசனத்தை மக்களுக்குக் காட்டி நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார். மத வெறியர்களுக்கு ஒரு உண்மையை உணர்த்தினார்.

மிகவும் ஆழ்ந்த தெய்வ பக்தியை உடைய லத்தீப்ஷா இஸ்லாமியர். தன் குரான் கூறும் ப்ரஹ்ம தத்வமும் வேதங்கள் கூறும் ப்ரஹ்ம தத்வமும் [மஹாகவி பாரதியார் இஸ்லாமிய அன்பர்கள் முன் உரையாற்றிய கருத்துக்கள் காண்க] ஒன்றே என்பதை அவர் உள்ளுணர்வு சதா கூறியது.

அதை உணர அவர் மிகவும் ஸ்ரத்தையுடன் தன் ஊரில் உள்ள ஓர் உண்மையான ஆன்மீக அந்தணரை அண்டி, தனக்கு ஆன்மீக வழிகாட்டும்படி வேண்டினார்.அந்தணரும் அவரை ஏற்றுக் கொள்ள, சனாதன தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய அனைத்து கர்மாக்களையும் அவர் செய்தார்.

### ஆன்மீகத்துக்கு எது முக்கியம்?

சனாதன தர்மத்தின் மகத்துவத்தைக் கோயில்கள் மூலம் அறிய நம் ஜெர்மன் அன்பர் Dr.பர்ண்ட் [Bernd], திருவனந்தபுரத்தில் பல சடங்குகளை மேற்கொண்டு தன்னை மனமாற்றம் செய்தார்.பல திவ்ய மஹா க்ஷேத்ரங்களை ஆண்டுதோறும் தரிசித்துச் செல்கிறார்.Selfidentity அவர் விட்டுவிட்டார்.ஆனால் மிகவும் ப்ரபலமான ஒருவர் தன்னை ஒரு ப்ரபலமான கோயிலுக்குள் விடவில்லை என்கிறார், அவர் தன் மதம் என்ற அடையாளத்தை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை.அதை இழக்காமல் கோயில் உள்ளே விடாது,இதை உணர நமக்கு மிகவும் ஆன்மீகப் பக்குவம் அவசியம்.

ஸ்ரீராம தாரக மந்த்ரத்தை உபதேசம் பெற்று லத்தீப்ஷா அதை உள்ளூர ஜெபித்து,

குரானும் பாதவமும் கூறும் ப்ரஹ்ம் தத்வத்தின் உண்மையைப் படிப்படியாக உணர்ந்து வருகிறார்.அப்போது அவரை ஏற்றுக் கொள்ளாத அவரது மதத்தினரும் சனாதன தர்மத்தை மதமாகக் கொள்ளும் வெறியரும் கேலியும் செய்வர், தூற்றுவர்.

மிகவும் ஸ்ரத்தையுடன் லத்தீப்ஷா தன் மனைவியுடன் தன் வழியின் ஆன்மீகப் பயணத்தை மேற்கொள்கிறார்.இந்நிலையில் தங்கள் மதத்திற்கு லத்தீப்ஷா அவமரியாதை செய்கிறார் என்று அவதூறு பேசி ராஜாவின் துணை கொண்டு அவரைத் தண்டிக்க முயற்சிக்கிறார்கள்.

**ராதை தந்த வெற்றிலை**

அன்று ராஸக்ரீடை நிகழ்ச்சிகளைத் தன் குரு கூறியதை முழுமையாக அறிந்து அதன் உட்பொருளைத் தன் மனைவியுடன் அமர்ந்து ஆராய்ச்சியும் கலந்தாலோசனையும் செய்து கொண்டு இருக்கிறார் லத்தீப்ஷா.

ராஜாவும் பல மதவெறியர்களும் [இரு மத வெறியர்களும் தான்] அவர் வீட்டு முன் வர, உரிய மரியாதை செய்து உள்ளே அழைத்தார் லத்தீப்ஷா.

மஹா கோபத்துடன் வீட்டுள் வந்த ராஜாவின் கண்கள் கோபத்தால் மேலும் சிவந்தன. வீடு முழுக்கச் சுவற்றில் பாகவதக் காட்சிகளை வண்ணத்தில் தீட்டி வைத்து இருக்கிறார் இவரது மனைவி.அவற்றைக் கண்டு கேலியும் அவமானமும் செய்தனர். அப்போது மதக்கலவரம் உருவாகும் சூழல் ஏற்பட, லத்தீப்ஷா அதைத் தடுத்து, தான் உணர்ந்த மேன்மையான உண்மையை எடுத்துக் கூறினார்.

அப்போது ராஜா, **"சரி, கிறுக்குத் தனமாக கதைகளை உண்மை என எண்ணி எண்ணி வரைந்து இருக்கிறீர், எங்கே அதோ அந்தப் பெண் தரும் தாம்பூலத்தை இந்த நீல நிறக் கண்ணன் உண்பானா? அது ப்ரஹ்ம சத்யமோ?"**

அப்போது லத்தீப்ஷா மிகவும் அமைதியாகத் தன் குருவின் அருள் கொண்டு, ஸ்ரீராம தாரக மந்த்ரத்தை விழிப்புணர்வில் ஜெபிக்க, அவருள்ளும் எதிலும் விளங்கும் பரம்பொருளான சத்யம் வெளிப்படத் தொடங்கியது.ராதை தர க்ருஷ்ணன் கை நீட்டி அதை வாங்கி யாவரும் பார்க்க வாயில் போட்டுக் கொண்டான்.அப்போதே பலருக்கு உண்மை புரிய பலர் புரியாமல் இவர் ஏதோ மாயவித்தை செய்வதாக விலகிச் சென்றனர்.ராஜா மனமாற்றம் கண்டார்.தன் ஆட்சியில் மதக்கலவரம் வராமல் அமைதி காத்து ஆண்டார்.லத்தீப்ஷா மேன்மேலும் ஆன்மீகப் பக்குவம் கொண்டு வீடு பேறு உற்றது.

ஹரி ஓம்!